சந்தையில் விற்பனை செய்வது கடினமாக இருந்ததால், அந்த காம்பிளக்ஸ் உர விலையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 1,552·01 லிருந்து ரூ. 1,506·01 ஆக குறைக்கப்பட்டது. அப்படி குறைக்கப் பட்ட பின்பும் கூட மேற்படி உர இருப்பை விற்றுத் தீர்க்க இயல வில்லை. திருவாளர் ஸ்பிக் உரக்கம்பெனி நிலுவையில் உள்ள எல்லா என். பி. கே. காம்பிளக்சையும் உரக்கலவை தயாரிக்க எடுத்துக் கொள்வதற்கு முன்வந்த காரணத்தால், மேற்படி உரவிலையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 1,055 ஆக அரசு குறைத்தது. ஆயினும் திருவாளர்கள் ஸ்பிக் உரக் கம்பெனியார் மிகக் குறைந்த அளவு காம்பிளக்ஸ் உரத்தையே இதுவரை அரசின் இருப்பில் இருந்து வாங்கியுள்ளார். மீதமுள்ள என். பி. கே. 15:15:15 இருப்பை கூடிய விரைவில் குறைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்த கையிருப் பில் இருக்கும் காம்பிளக்ஸ் உரத்தால் அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டது? இந்த 15:15:15 காம்பிளக்ஸ் உரத்திற்கு பதிலாக 17:17:17 காம்பிளக்ஸ் உரத்தை வாங்க விவசாயிகள் மிகவும் ஆர்வம் காட்டுவதால், அதனை வழங்குவதற்கு அரசு முயற்சிக் குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எவ்வளவு இழப்பு என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், 1974-75 ஆம் ஆண்டின் அரசு வாணிபத் திட்டத்தின் கீழ் 11,965 மெட்ரிக் டன் எடையுள்ள என். பி. கே. 15:15:15 காம்பிளக்ஸ் உரம் அரசின் கணக்கில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருப்பில் இருந்தது. அதைக் குறைப்பதற் காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அது குறைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கும் யோசனையை அரசு பரிசீலிக்கும்.

3. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி

(ஆ) மதிப்பீட்டுக் குழு

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, சிறைத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் பதினான்காவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை (இப் பேரவைக்கு அளிக்கிறேன்.